


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 2019

We Are Here..!! To Guide You..!!



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 22.11.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- நியமனங்கள்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்










## தேசிய நிகழ்வுகள்

- வாடகைத்தாய் முறையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான மசோதாவை மாநிலங்களவையின் தேர்வுக் குழு ஆய்வுக்காக மத்திய அரசு வியாழக்கிழமை (21.11.2019) பரிந்துரைத்தது.
  - **வாடகைத்தாய் முறை (ஒழுங்கு முறைப்படுத்துதல்) மசோதா 2019-இன் படி, வர்த்தக அடிப்படையில் வாடகைத்தாய் முறையை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்படும்.** அத்துடன், கரு முட்டையை விற்பனை செய்வது மற்றும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கும் தடை விதிக்கப்படும்.
  - **செய்தி துளிகள்:**
    - வாடகைத்தாய் முறையில் குழந்தை பெற்றுக்கொள்ள விரும்பும் தம்பதி இந்தியக் குடிமக்களாக இருக்க வேண்டும். அதில் மனைவி 23 முதல் 50 வயதுக்கு உள்பட்டவராகவும், கணவன் 26 முதல் 55 வயதுக்கு உள்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

## சர்வதேச நிகழ்வுகள்

- **கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ,** 36 உறுப்பினர்கள் கொண்ட தனது புதிய அமைச்சரவையில் 4 இந்திய வம்சாவளியினருக்கு இடமளித்துள்ளார்.

- எம்.பி.க்களான நவ்தீப் சிங் பெய்ன்ஸ், ஹர்ஜித் சிங் சஜின், பர்திஷ் சாக்கர், அனிதா ஆனந்த் ஆகியோர் ட்ரூடோ அமைச்சரவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.
- **செய்தி துளிகள்**
  - தேசிய பாதுகாப்புத் துறை அமைச்சராக ஹர்ஜித் சிங் சஜ்ஜனும், பொதுச் சேவைகள் துறை அமைச்சராக அனிதா ஆனந்தும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் அனிதா ஆனந்த், கனடா அமைச்சரவையில் முதல் முதலாக இணைந்திருக்கும் ஹிந்து பெண் அமைச்சராவார்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- உலகக் கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் **இந்தியாவின் இளம் நட்சத்திரங்கள் மானு பாக்கர், இளவேனில் வாலறிவன், திவ்யான்ஷ் சிங் பன்வார் ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர்.** இதன் மூலம் பதக்கப் பட்டியலில் இந்தியா முதலிடத்தை பெற்றுள்ளது.
  - சீனாவின் புட்டியன் நகரில் ஐஎஸ்எஸ்எப் உலகக் கோப்பை துப்பாக்கி சுடும் போட்டி நடைபெற்று வருகிறது.

## நியமனங்கள்

- **தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையத்தின் தலைமை தகவல் ஆணையராக ஆர்.ராஜகோபால் வியாழக்கிழமை (21.11.2019)**

**பொறுப்பேற்றார்.** முன்னதாக, ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் முன்னிலையில் அவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்

- **செய்தி துளிகள்:**
  - தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையத்தின் தலைமை ஆணையராக இருந்த ஷீலா ப்ரியா, கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஓய்வு பெற்றார்.

## விருதுகள்

- புதுடெல்லியின் பிரவாசி பாரதிய கேந்திராவில் உலக கழிவறை தினத்தை முன்னிட்டு பல்வேறு பிரிவுகளில் முதலிடம் வகிக்கும் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு **ஸ்வச் சர்வேஷன் கிராமீன் 2019** விருதுகளை இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் மத்திய அமைச்சர் வழங்கினார்.
- **செய்தி துளிகள்**
  - முதலிடத்தில் உள்ள மாநிலம்: தமிழ்நாடு,
  - முதலிடத்தில் உள்ள மாவட்டம்: பெடப்பள்ளி (தெலுங்கானா),
  - அதிகபட்ச குடிமக்கள் பங்கேற்கும் மாநிலம்: உத்தரபிரதேசம்.

## முக்கிய தினங்கள்

- **உலக தத்துவ தினம்** ஒவ்வொரு ஆண்டும் **நவம்பர் மூன்றாவது வியாழக்கிழமை** உலகளவில் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு இது நவம்பர் 21 அனுசரிக்கப்பட்டது.
  - இந்த நாளில், யுனெஸ்கோ மனித சிந்தனையின் வளர்ச்சிக்கான தத்துவத்தின் மதிப்பை, ஒவ்வொரு கலாச்சாரத்திற்கும் தனிநபருக்கும் எடுத்துரைத்தது.

## திருக்குறள்

**குறள் எண் : 25**

குறள் அதிகாரம் : நீத்தார் பெருமை

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : பாயிரம்

**ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு சார்கோமான்**

**இந்திரனே சாலுங் கரி.**

**விளக்கம் :** ஐந்து புலன்களாலாகும் ஆசைகளை ஒழித்தவனுடைய வல்லமைக்கு, வானுலகத்தாரின் தலைவனாகிய இந்திரனே போதுமான சான்று ஆவான்.